உ

சிவமயம்



அமரர்

# திருமதி. மு. சுப்பிரமணியம்

அவர்களது

# நினைவு மலர்

**In Memory of Late**

# Mrs .M. Subramaniam. *B.A , Dip .in .Ed*

(Former Principal , Girls College ,Pandatarippu)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
பம்பலப்பிட்டியை வதிவிடமாக உள்ளவரும்
யாழ் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின்
முன்னாள் அதிபருமாகிய

# திருமதி. மு. சுப்பிரமணியம்



மண்ணில் : **05.11.1929** விண்ணில் ; **13.10.1999**

திதி வெண்பா

ஆண்டு பிரமாதி ஆங்கு புரட்டாதி
நீண்ட அபரச்சதுர்த்தியே - ஈண்டு புகழ்
முத்தம்ம ஆசிரியைமூலன் திருவடியைத்
தித்திக்கச் சேர்ந்த தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவல்

சீர்தரு யாழ்ப்பாணத்து இளவாலை மருங்கில்
மாவொடு பலாவும் வாழை தென்னையும்
நன்னீர் நன்னிலம் இவையும் பொருந்தி
கூத்து மாலைப் பிள்ளையார் அருளால்
சீருடன் விளங்கும் முள்ளானைப் பதியில்
காசி நாதர் நாகமுத்து
முத்து வேலு நாகம்மாவை
அன்புடன் மணந்து அறத்தில் வாழ்ந்து
மலேசியாவில் பொலிஸ் நிர்வாக
சேவையில் பணி புரிந்த பண்பார்
பொன்னம் பலத்தொடு பொன்னம்மாவையும்
செல்லம் மாவொடு தையல் நாயகி
முத்தம் மாவொடு பால சேகரம்
என்னும் மக்களை இன்புடன் பெற்றார்
இப்பிள்ளைகளில்,
முத்தம் மாவெனும் மங்கை நல்லாள்
இளவாலை மெய்கண்டான் வித்தியா சாலை
இளவாலை கன்னியர் மடம் பாடசாலை
ஆகியவற்றில் ஆரம்பக் கல்வியைக்
கற்றபின் சென்னை சென்று ஆங்கே
சர்வ கலாசாலையில் சேர்ந்து படித்து
கலைமாமணிப் பட்டம் பெற்றபின் வந்து
இலங்கைச் சர்வ கலா சாலையிலே
பட்டப் பின்படிப் பாக வுள்ள
கல்வியில் புலமைப் பட்டம் பெற்று
இளவாலை கன்னியர் மடம் பாடசாலை
மன்னார் கன்னியர் மடம் பாடசாலை
ஆகிய வற்றில் அருங்கலை பயிற்றி
பண்டத் தரிப்பு மகளிர் கல்லூரி
அதிப ராகப் பணியது புரிந்தார்.
அக்கா லத்தில் இளவாலைப் பதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பல வாணர் வினாசித் தம்பி
சுப்பர் வள்ளிப் பிள்ளையை மணந்து
பெற்ற மகனாய் வந்தவ தரித்து
கிராம அபிவிருத்தி அதிகா ரியான
சுப்பிர மணியத் தோன்றலை மணந்து
சுமித்திரா சயந்தன் சஞ்சயன் என்னும்
மக்களைப் பெற்று மகிழ்வுடன் வாழ்ந்தார்
இப்பிள்ளைகளில்
லண்டனில் கணக்காளர் ஆகப் பணிபுரி
சுமித்திரா அங்கு கணக்காள ராகப்
பணிபுரி கின்ற வரதராச சிங்கனை
மணந்து மகிழ்ந்து மக்க ளாகக்
கவிதா, கபிலன் இவர்களைப் பெற்றார்
லண்டனில் பொறியிய லாள னாகப்
பணியது புரியம் சயந்தன் மகனார்
ஆன் என்னும் மங்கையை அன்புடன் மணந்து
கார்த்திக் என்னும் பிள்ளையைப் பெற்றார்
சிங்கப் பூரில் பொறியிய லாளன்
சஞ்சயன் என்பவர் எ. சி . எஸ் பட்டம் கணனியில்
பெற்ற ஜெதீஸ் வரியை இன்புடன் மணந்தார்
இத்துணைச் சுற்றம் இயைந்த இந்த
முத்தம் மாவெனும் மூதறி வாட்டி
கூத்து மாவலைப் பிள்ளையார் கோவில்
பணிகள் நாளும் பக்தியில் ஆற்றினார்
குடும்பத்தில் அன்புடன் கூடி வாழ்ந்தார்
பிள்ளைகள் சிறப்பைக் கண்டு மகிழ்ந்தார்
அதிப ராயிருந்து ஓய்வு பெற்று
நன்மன தோடு நாளும் வாழ்ந்தார்.
பிரமாதி வருடம் புரட்டாதி மாதம்
அபர பக்கம் சதுர்த்தித் திதியில்
கணவன் பிள்ளைகள் கதறிப் புலம்பத்
தில்லை, யம்பலவன் சேவடி
சேர்ந்தனன் தனது செங்கரங் குவித்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**R.S.Nadarajah .** *M.A.,Dip-in-Ed., S.L.E.A.S*
*(EMERITUS PRINCIPAL, PALALY T.C )*

# மறவற்க மாசற்றார் கேண்மை

திரிகரணசுத்தியுடன் பணியாற்றும் ஆசிரியர் சிறந்த செல்வங்களாகச் சமூகத்தால் மதிக்கப்படுவர்.அவர்கள் அறிவு விளக்குகள். அவர்களே வாக்கும் வாழ்வும் ஒன்றிக்க வாழ்ந்து காட்டி வழிகாட்டும் வள்ளல்கள்.

அபிவிருத்தி அடையும் சமூகத்தில் ஆசிரியரின் அடிபங்கு மிகக் காத்திரமானது. மானிடம் சிறக்க ஆசிரியரால்தான் அதிகம் உதவ முடியும்.

அமரத்துவம் அடைந்த ஆசிரியை திருமதி.முத்தம்மா சுப்பிர மணியம் அவர்கள் இலட்சிய ஆசிரியையாகப் பணியாற்றினார். அவரது பணிச்சிறப்பினை மாணவரும் பெற்றோரும் கல்வி முன்னேற்ற விரும்பிகளும் நன்றியோடு நினைவு கூர்வர். அவர் அமைதியாக அரும்பணி ஆற்றி உத்தியோகபூர்வமாக ஓய்வு பெற்றபின்னரும் தனது இறுதி மூச்சுவரை தொடர்ந்து கற்போர்க்கு உதவும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

"கற்றுகொண்டே இருக்கும் ஆசிரியரே கற்பிக்கத் தகுதி உள்ளவராவார்" என்பதில் அதிக நம்பிக்கை கொண்டவரான திருமதி முத்தம்மா சுப்பிரமணியத்தின் ஆசிரிய வாண்மைச் சிற ப்பினை அறியும் வாய்ப்புப் பெற்றிருந்தேன். கால் நூற்றாண்டுக்கு மேலாக ஆசிரிய கல்வித்துறையில் ஈடுபட்டிருந்ததால் கல்வியல் தொடர்பான கலந்துரையாடல் வாய்ப்புகள் இருந்தன. பல தடவைகள் அவரின் பணிச்சிறப்பினைப் பாராட்டி மகிழ்ந்தேன்.

தான் கல்வி கற்ற இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடப்பாடசாலையில் பட்டதாரியாகத் தனது கல்விப்பணியினை ஆரம்பித்துச் சிறப்புடன் பணிபுரிந்ததைக் கண்டு நயந்த பாடசாலை நிரவாகத்தினர் அவரை மன்னார்க் கன்னியர் மடப்பாடசாலைக்கு நியமித்து மன்னார்ப் பிரதேசக் கல்வி வளத்தினைச் சிறப்புறச் செய்தனர். அவர் நெடுங்காலம் பணிபுரிந்தது பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலேயே . அங்கு அவர் ஆசிரியராய் , உபஅதிபராய் பணிபுரிந்தார்.

அன்பும் அறிவும்அடக்கமும் இன்சொல்லும் இரக்கமும் இசையப் பெற்றதால் திருமதி. முத்தம்மா சுப்பிரமணியம் நிறை குண ஆசிரியை ஆக விளங்கினார். மாணவரை அறிந்து பாடத்தை அறிந்து தன்னையும் அறிந்து பணியாற்றியவர் என்பதால்அவரின் ஆசிரியப்பணி அவரின் வாழ்க் கைப்பணியாய் அமைந்து அவரால் மகிழவும் மகிழ்விக்கவும் முடிந்தது.

நல்லாசிரியருக்கு நல்ல உதாரணரான திருமதி. முத்தம்மா சுப்பிரமணியம் கல்விக்கொடையாளியாக இறுதிவரை அறிவொளி வழங்கியதைக் கருத்திற் கொண்டு அவரின்ஆசிரியப்பண்புகளை ஓம்புதலே அவருக்குப்பொருத்தமான அஞ்சலி யாகும்.

" மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்புஆவார் நட்பு "

R.S.Nadarajah .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A LEADER, KIND TEACHER AND MOTHERLY

Mrs. M.Subramaniam, retired principal, Pandatarippu Girls High College, who passed away recently at the age of 70 give the best years of her life to Pandatarippu Girls High College where she has become a legand.

Mrs.M.Subramaniam was an eminant educationist, administrator and matriarch to thousands of girls. Pandatarippu Girls College under her stewardship has served both good and the community very splendily offering the wholesome education which plato defined as the first and the fairest thing that the best of men and women ever have . She was a dedicated and devoted teacher who toiled for the progress and success of Girls College.

There was a renaissance in the year 1929 and thus started a campaign for giving girls a best education in a modern atmosphere.

Mrs.M.Subramaniam joined the College in 1962 as a teacher when this College was struggling to forge ahead , and facing many odds. She served this College fore more than 25 years.

Mrs.M.Subramaniam started teaching Ilavalai Holy Family Convent, then Mannar Convent.

She obtained her Bachelor of Arts in History & Economics from the university of Madras in 1955. After Graduation, She joined Ilavalai Holy family Convent. She did her Diploma in Education and became Deputy Principal in 1962. She was a gracious lady and a strict disciplinarian. To us, she personified such graciousness, Besides she was a proctioner of the noble profession



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of teaching and was respected and commanded respect from her staff.

Our association with Mrs Subramaniam was long and intimate. She was our revered principal, teacher ,guide , philosopher and family friends. She constantly encouraged, helped and stimulated us in all our pursuits.

She spent the evening for her life as a guide and mentor very much among her numerous friends who came from all walks of life having kept every one of them spell- bound with her knowledge , experience and exemplary conduct.

So,we are sad that Mrs. M.Subramaniam our beloved Principal, is no more. We were shocked when we heard the news. But her sprit lives on the lives of her pupils.

The true tribute we can pay to her is to live true to her ideals of hard work, her philosophy of " I can" and her sprit of concern for all. May her soul rest in peace.

**OLD GIRLS OF**

**PANDATARIPPU GIRLS COLLEGE**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APPRECIATION

## Mrs. M. Subramaniam

It was a shocking news that our beloved Subramaniam aunty passed away all of a sudden. Though her mortal remains are no more she is immortal in our hearts.

We came to know her somewhere in the early nineties, when we were students in Royal College,studying in grade VIII. Our parents say it way by chance that they met Subramaniam Aunty at a friend's residence and during the course of the conversation , Aunty readily agreed to coach the children in their studies up to their

'O' Levels.

Subramaniam Aunty was a scholar and a former Principal of J/ Pandatharippu Girl's Maha Vidyalayam. While she was helping us in our studies she never treated us like students but took care and loved us like her own children. We too were quickly drawn towards her and gave her due respect and love as our own mother.

She was so much close and concerned even long after our O-levels. She used to visit us and advise us and shower us with gifts.

Our Subramaniam Aunty was deeply religious. She always prayed to Palam Pillayar (Lord Ganesh) and made us recite a "Thevaram" before we started our studies for the day. Her favorite and the one she always used to recite is as follows

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

திரு வாக்குஞ் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை.

திருச்சிற்றம்பலம்

Our teacher Subramaniam Aunty ' s sudden demise is a great and irreparable loss. Being so much close to us she passed away on the 13th of October which happens to be the twins birthday (Mohan & Yohan ). It is the will of the one above that we will always remember her on this date.

"Ammah" as you are and shall be called by us, will always be in our hearts and thoughts and will be remembered in our daily prayers to attain Moksha.

***Shanker, Mohan & Yohan***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# ஔவையார் அருளிய

## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூஷிக வாஹன
இப்பொழு தென்னை யாட் கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந்தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தெ னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்து திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயிலொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்துப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் கழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பினாவி லுணர்த்திச்
குண்டலி யதனிற் கூடிய வசையை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழும்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் னுறுப்பையுங் காட்டிச்
சண்முக நூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் கலைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டிற் கொன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் கவசம்

இது முத்தல முனிவருக்கு காசிப மகரிஷி உபதேசித்தது. இதைத் தமிழில் கச்சியப்ப சுவாமிகள் பின்வருமாறு பாடித்தந்துள்ளார்.

வளர்சிகைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேக
மகோற்கடர்தாம் அமர்ந்து காக்க
விளரறநெற் றியைஎன்றும் விளங்கியகா
சிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வில்மகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க.

கவின்வளரும் அதரம்கச முகர்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாம் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க அள்ளழிற்செஞ்
செவிபாச பாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடி போல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க.

காமருபூ முகந்தன்னைக் குணசர்நனி
காக்ககளம் கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவினா
சன்காக்க இதயந் தன்னைத்
தோமலுங் கணநாதர் காக்க அகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க.

பக்கம் இரண்டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை அல்லல்
உக்கண பண்காக்க ஊருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்கஇரு
பதம்ஏக தந்தர் காக்க
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் ஆசாபூ ரகர்காக்க
விரல்பதும அத்தர் காக்க
கேழ்கிளரும் நகங்கள் விநா
யகர்காக்க கிழக்கினிற்புத் தீசர்காக்க.

அக்கினியிற் சித்தீசர் காக்கஉமா
புத்திரர்தென் ஆசைகாக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழ்உ தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கில்
ஈசநந் தனரே காக்க.

ஏகதந்தர் பகல் முழுதுங் காக்கஇர
விலும்சந்தி இரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்க இராக்
கதர்பூதம் உறுவே தாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவிலாத
வேகமுறு பிணிபலமும் விலக்குபா
சாங்குசர்தம் விரைந்து காக்க.

மதிஞானம் தவம் தானம் மானம்ஒளி
புகழ்குலம் வண் சரீரம் முற்றும்
பதிவான தனம்தானி யம்கிருகம்
மனைவிமைந்தர் பயிலநட் பாதிக்
கதியாவும் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றீச் விதம்பகபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்ஓ
திடினும்பால் இடையூ றொன்றும்
ஒன்று றா முனிவரர்காள் அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்றஆங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்.

## விநாயகர் கவசம்

ஆதியில் இக் கவசத்தை காசிய மனிவர் முற்கல முனிவருக்கு அருளிச் செய்ய அவர் மான்விய முனிவருக்கு அனுக்கிரகிக்க, அவர் மரீசி முனிவருக்கு உபதேசித்தருள அவர் பல முனிவர் களுக்குத் திருவாய் மலந்தளிச் செய்தன ரென்றறிக.

நித்யகருமங்களை முடித்து பரிசுத்தமாகிய ஓரிடத்தில் இருந்து கொண்டு ஒன்றுபட்ட மனத்து டனே விநாயகரை தியானித்து, பக்தியுடனே இந்தக் கவசத்தைப் பாராயணஞ் செய்பவர்களுக்குப் பிணியும் வறுமையும், பேய் பூதங்காளா லுண்டாகின்ற பல துன்பங்களும், கவலைகளும் பாப முதலியவைகளும் நீங்கும். அன்றியும், பெருஞ் செல்வமும் , தீர்க்காயுளும் களபுத்திர மித்திராதிகளும் உண்டாகும். மேலும், யாத்திரையிலே இதைச் செபித்தால், சகல விக்கினமும் போய் பயன்களெல்லாம் கைகூடும். யுத்தத்திலே இதனை சொன்னால் ஜெயமுண்டாகும். இருபத் தொரு நாள் நாளொன்றுக்கு ஏழுமுறை தோத்திரஞ் செய்தால், மாரணநீங்கு வதன்றி உச்சாடணம் ஆக்ருஷணம் ஸ்தம்பிந முதலிய வைகள் பயனுறும். இருபத்தொருநாள் நித்தியம் இருபத்தொரு தரஞ் செபித்தால், சிறை யிருப்பு விடுதலையாவது மன்றி, அரசர்களுடைய நிஷ்டுரமும் நீங்கும். அரசனைக் காணப்போகும் போது பக்தியினால் மூன்று தரம் இதை ஓதினால் அவன் வசப் படுவான். இதைப்படித்தாலும், ஒருவர் சொல்லக் கேட்டாலும், பூசித்தாலும், எப்படிப்பட்ட துன்பமும் நீங்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரம்

# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் வணக்கம்

ஐந்துகரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணியின் கனிந்து

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கசூம் தீமையைக் காக்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்

திரு வாக்குஞ் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை.

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசு போதகக் கவளமிடக்
களுத்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

### திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனைமற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப் பேசாத
நாளெல்லாம் பிறவா நாளே.

### திருநாவுக்கரசு நாயனார்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப் பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டானத்துறை யம்மானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர்ப் பிறைகண்ணி யானை

மலையான் மகளொடும் பாடி

போதொடு நீர் சுமந் தேத்திப்

புகுவாரவர்பின் புகுவேன்

யாதுஞ் சுவடுப டாமல்

ஐயா றடைகின்ற போது

காதன் மடப்பிடி யோடுங்

களிறு வருவன கண்டேன்

கண்டே னவர்திருப் பாதங்

கண்டறி யாதன கண்டேன்

## சுந்தர மூர்த்தி நாயனார்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப்

பாத மேமனம் பாவித்தேன்

பெற்ற லும்பிறந் தேனினிப்பிற

வாத தன்மைவந் தெய்தினேன்

கற்ற வர் தொழு தேத்துஞ் சீர்க்கறை

யூரிற் பாண்டிக் கொடுமுடி

நற்ற வாவுனை நான்ம றக்கினும்

சொல்லும் நாநமச்சி வாயவே.

மீளா அடிமை யுமக்கே ஆளாய்ப்

பிறரை வேண்டாதே

மூனாத் தீப்போல் உள்ளே கனன்று

முகத்தால் மிக வாடி

ஆளா யிருக்கும் யடியார் தங்கள்

அல்லல் சொன்னக்கால்

வாளாங் கிருப்பீர் திருவாரூரீர்

வாழ்ந்து போதீரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாற்விறல் வேங்கையின் தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரானென்னைத் தாங்கிக்கொள்ளே.

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
டேபாதே கொண்டிலையே?
இன்றோ ரிடையூ றெனக் குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செவ்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்க நாயகமே!

## திருவிசைப்பா

ஒளி வளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துட் டித்திக் குந்தேனே
அளிவளருள்ளத் தானந்தக்கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துக்கந்தாயைத்
தொண்டனேன் விளம்புமாவிளம்பே.

கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியைக்
கரையிலாக் கருணைமாகடலை
மற்றவரறியா மாணிக்கமலையை
மதிப்பவர் மனமணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ்சிவனைத்
திருவிழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண்டுள்ளங்
குளிவென் கண் குளிர்ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள் ;
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்;
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு
ஆட் செய்மின் : குழாம் புகுந்து
"அண்டங் கடந்த பொருளளவு இல்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்"
என்றே பல்லாண்டு கூறுதுமே!

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

## பெரியபுராணம்

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் சரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையிற் தனிப்பெரும் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த

# திருவாசகம்

தொல்லை இரும்பிறவிச் சூழும்தளை நீக்கி
அல்லலறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவா சகம் என்னும் தேன் .

## சிவபுராணம்

நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமனிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க!
வேகம் கெடுத்(து) ஆண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசன் அடிபோற்றி ! எந்தை அடிபோற்றி !
தேசனடி போற்றி ! சிவன்சே வடிபோற்றி !
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி !
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி !
ஆராத இன்பம் அருளுமலை போற்றி!
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்(கு) எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய்! விளங்கு(கு)ஒளியாய்
எண்இறந்(து) எல்லைஇலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா(று) ஒன்றறியேன்!
புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்விருகம்ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்(து) இளைத்தேன்;
எம்பெருமான்!
மெய்யேயுன் பொன்னடிகள் கண்(டு)இன்று வீடுற்றேன்;
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா! விடைப்பாகா வேதங்கள்
ஐயா, எனஓங்கி ஆழ்ந்(து)அகன்ற நுண்ணியனே !
வெய்யாய்! தணியாய் இயமான னாம்விமலா !
பொய்யா யினஎல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே !
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே !
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அள(வு)இறுதி இல்லாய் !அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்! சேயாய் நணியானே!
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே !
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்(து)அடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்(பு)அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்(து)உடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த்(து) எங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்(து)உள் உருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே
மா(சு)அற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேன்ஆர் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்(று) அறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே !
ஆரா அமுதே! அளவு இலாப் பெருமானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே, உள்ளானே!
அன்பருக்(கு) அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்த்(து)என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே!
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே!
காக்கும்எம் காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்(று)இன்ப வெள்ளமே! அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே!
வேற்று விகார விடக்(கு) உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா! அரனே! ஓ வென்(று)என்று
போற்றிப் புகழ்ந்(து)இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்(டு)இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்(டு)அழிக்க வல்லானே!
நள்இருளில் நட்டம் பயின்(று)ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!
அல்லல் பிறவி அறுப்பானே! ஓ வென்று
சொல்லற்(கு) அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின், உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

ஓம் சரவணபவ நம

ஸ்ரீ தேவராஜ சுவாமிகள் அருளிய

# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்கு செல்வம் பலித்துக்கதித்து ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

நூல் நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந் தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுமங் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற்றென் முன் நித்தமுமொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகனறினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாவும்
நீறுடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்.
நன்நெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈரறு செவியில் இலங்கு குண்டலமும்
ஆறிரு திண்புயத்தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணை முழந்தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகதென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன்திருவடியை உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து உன்இணையடி காக்க
என்னுயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்து இருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
எனஇளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேர்இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண்ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நல் துணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வஜ்ரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்ம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகு பல பேய்களும்
தாண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகள் உடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாள்எனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்க
செக்கு செக்குச் செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகவலன் தணல் எரி
தணல்எரி தணல்எரி தணல்அது ஆக
விடு விடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புந்நரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்துஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து உயிர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக்கு அருள்வாய்
ஈரேம் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சைலொளி பவனே!
திரிபுர பவனே! திகழ்ஒளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனிய வேல் முருகா
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!
கதிர் காமத்துஉறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான் உனைப்பாட
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவிநன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்அருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்தி பெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்று அன்பாய் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுஉன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறுஅணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றவர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித் திடும்
நவம்தன் எனவும் நல்எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்துஉனது உள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துஉண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தஅமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள எந்தனது உளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கு ஓர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

எதிரிலாத பத்தி தனைமேவி
இனிய தாள் நினைப்பை இருப்போதும்
இதயவாரிதிக்குள் உறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே
கதிர காம வெற்பில் உறைவோனே
கனகமேருவொத்த புயவீரா
மதுரவாணியுற்ற கழலோனே
வழுதி கூனிமிர்த்த பெருமாளே
சந்த தம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டு கொண்டின்புற் றிடுவோனே
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
தெந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங்குன்றி பெருமாளே.

## வைரவக் கடவுள் துதி

விரித்தபல் கதிர் சூலம் வெடிபடு தமரு கங்கை
தரித்தோர் கோல கால பயிரவ வேழம்
உரித்துமை அஞ்சக் கண்டு ஒண்திரு மணிவாய் விள்ளச்
சிரித்திருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளிப்யே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையுங் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்கும்.

வான்முகில் வழாஅது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்கள் ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகெமல்லாம் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mrs C. Thullai nathar 074.203954
22/4 wijeyasekera road
Dehiwella

# நன்றி நவிலல்

இறைவனடி சேர்ந்த திருமதி. எம். சுப்பிரமணியம் அவர்களின் மரணச்செய்தியறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபச் செய்தியைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவிகள் புரிந்து எங்கள் துன்பத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
கணவர்,
மகள்,மகன்மார்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்


# Acknowledgement

The family members of the late Mrs.M.Subramaniam express their sincere gratitude and thanks to relatives, friends and all who attended the funeral, called over at their residence, sent messages of condolence and all those who helped in numerous ways during our recent bereabement . Regret inability to thank all individually.

***Husband,***
***Daughter,Sons,***
***Son-in-Law,Daughter-in -Laws***
***and, Grand Children***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*E.S Printers 257,1E Galle Road Wellawatte. T.P: 590462*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org